## மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

### மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017

### குடியியற்கல்வி

சுட்டெண் :- ..........................................

**தரம் : - 11**

**நேரம் :- 3. 00 மணித்தியாலம்**

**பகுதி - I**

❖ **கவனிக்க.**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி ( X ) இடுக.
- அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

(01) எதென்ஸ் நகராட்சியில் பிரதான ஆட்சி நிறுவனம்

(1) மக்கள் மன்றம் (2) பாராளுமன்றம்
(3) நாடாளுமன்றம் (4) டயட்

(02) கி.மு 6ம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்த ஆரியக் குடியேற்றமான வஜ்ஜியில் இருந்த ஆட்சிமுறை

(1) இராணுவ ஆட்சி (2) மன்னராட்சி
(3) குழுவாட்சி (4) சர்வாதிகார ஆட்சி

(03) கி.பி 5ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 15 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் ஐரோப்பாவில் நிலவிய அமைப்பு

(1) குடியாட்சி அமைப்புமுறை (2) நிலமானிய சமுதாய அமைப்புமுறை
(3) நேரடி ஆட்சி அமைப்புமுறை (4) தேசிய அரசு அமைப்புமுறை

(04) “மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகின்ற மக்களுடைய ஆட்சி” ஜனநாயகம் என வரைவிலக்கணம் கூறியவர்

(1) சீலர் (2) ஆபிரகாம்லிங்கன்
(3) காணர் (4) T.B டெயிலர்

(05) உலகில் இன்று சமதர்ம அரசியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் நாடுகள்

(1) சீனா, இலங்கை (2) இந்தியா, சீனா
(3) வடகொரியா, தென்கொரியா (4) கியூபா, வடகொரியா

(06) இலங்கையில் தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும் போது பின்பற்றப்படும் பிரதான அளவீட்டு நியதி

(1) நகராக்கவீதம், சனத்தொகை (2) கிராமமக்கள் தொகை, நகராக்கவீதம்
(3) நிலப்பரப்பு, சனத்தொகை (4) நிலப்பரப்பு, உட்கட்டமைப்பு வீதம்



kalvi.lk

(07) மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்கள் ஒன்றிணைந்த தேர்தல் மாவட்டம்
(1) இராஜரட்டை (2) வன்னி (3) மன்னார் (4) முல்லைத்தீவு

(08) மனிதன் தனது சமூக வாழ்வைப் பூரணப்படுத்திக் கொள்வதற்காக தேவைப்படும் நிபந்தனைத் தொகுதி
(1) உரிமைகள் (2) பாதுகாப்பு (3) சுதந்திரம் (4) சமத்துவம்

(09) பாராளுமன்ற அரசாங்க முறையில் பெயரளவிலான நிர்வாகியைத் தெரிவு செய்பவர்
(1) உயர்நீதிமன்ற நீதிபதி (2) சபாநாயகர்
(3) எதிர்க்கட்சித் தலைவர் (4) பிரதமர்

(10) அதிகாரப்பன்முகப்படுத்தலில் பிராந்திய அலகுகளிடம் ஒப்படைக்கப்படும் அதிகாரங்கள்
(1) நிர்வாக அதிகாரங்கள் (2) சட்டத்துறை அதிகாரங்கள்
(3) நிறைவேற்றுத்துறை (4) நீதித்துறை

(11) மத்திய அரசின் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை அதிகாரங்கள் அரசியல் யாப்பின் மூலம் பிராந்திய ஆட்சியலகுகளிடம் ஒப்படைக்கப்படுதல்
(1) அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல் எனவாகும்
(2) அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் எனவாகும்
(3) அதிகாரத்தை நெறிப்படுத்தல் எனவாகும்
(4) அதிகாரத்தைக் கையளித்தல் எனவாகும்

(12) மோதலைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய சிறந்த சனநாயக முறை
(1) மோதலுடன் தொடர்பற்றவரின் கருத்துக்களைச் செவிமடுத்துத் தீர்வு காண்பது
(2) நடுநிலையாளர் தனக்குச் சார்பானவருக்குச் சாதகமான கருத்துக்களைக் கூறுவது
(3) மோதலுடன் தொடர்புடைய இருபிரிவினரின் கருத்துக்களை எடுத்து தீர்வு காண்பது
(4) நடுநிலையாளரினால் முன்வைக்கப்படும் முடிவுகளை ஏற்றுக்கொள்ளச் செய்வது

(13) ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் செயற்பட்ட மூன்று பிரதான நீதிமன்ற மாவட்டங்கள்
(1) கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு
(2) கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை
(3) கொழும்பு, வவுனியா, புத்தளம்
(4) கொழும்பு, யாழ்ப்பாணம், காலி

(14) மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கான நீதிபதிகளை நியமிப்பவர்
(1) யாப்புதிட்ட சபையின் அனுமதியுடன் ஜனாதிபதி
(2) யாப்புதிட்ட சபையின் அனுமதியுடன் பிரதமர்
(3) யாப்புத்திட்ட சபையின் அனுமதியுடன் உயர்நீதிமன்றம்
(4) யாப்புதிட்ட சபையின் அனுமதியுடன் நீதியமைச்சர்

(15) இலங்கையில் மாகாண மேல் நீதிமன்றங்கள் உருவாக்கம் இடம் பெற்ற யாப்பு
(1) 1972 அரசியல் யாப்பு (2) 1978 அரசியல் யாப்பு
(3) 1931 அரசியல் யாப்பு (4) 1947 அரசியல் யாப்பு

(16) நீதவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பில் திருப்தி அடையாதவர் மேன் முறையீடு செய்வதற்குரிய நீதிமன்றம்
(1) மாவட்ட நீதிமன்றம் (2) மேல் நீதிமன்றம்
(3) மாகாண மேல் நீதிமன்றம் (4) இணக்க சபை



kalvi.lk

(17) நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் தலைவராகச் செயற்படுபவர்

(1) பிரதமர் (2) ஜனாதிபதி (3) நீதியமைச்சர் (4) பிரதமநீதியரசர்

(18) தொழிலாளருக்கும் தொழில் வழங்குனருக்கும் இடையே ஏற்படும் பிரச்சனைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் சட்டம்

(1) 1950 ஆம் ஆண்டின் தொழிற் பிரச்சினைக் கட்டளைச் சட்டம்

(2) 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க கட்டளைச் சட்டம்

(3) 1928 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கட்டளைச் சட்டம்

(4) 1965 ஆம் ஆண்டின் 1 ஆம் கட்டளைச் சட்டம்

(19) இலங்கையின் தற்போதைய நிதியமைச்சர்

(1) விஜயதாச ராஜபக்ச (2) ரதுப் ஹக்கீம்

(3) தலதா அத்துகோரள (4) அத்துட செனவிரட்ன

(20) புராதன இலங்கையில் பொலன்னறுவைக் காலத்தில் இருந்த நான்கு நிர்வாகப் பிரிவுகள்

(1) உத்தரதேசம், பிரச்சீனதேசம், தக்கினதேசம், இராசரட்டை

(2) இராசரட்டை, தக்கிணதேசம், தொலஸ்தஹஸ்ரட்டை, அட்டதஹஸ்ரட்டை

(3) இராசரட்டை, ருகுணுரட்டை, மலையரட்டை, தக்கிணதேசம்

(4) உத்தரதேசம், ருகுணுரட்டை, பிரச்சீனதேசம், தொலஸ்தஹஸ்ரட்டை

(21) 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க கட்டளைச் சட்டம் மூலம் உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றம்

(1) மாநகரசபை எனவாகும் (2) நகரசபை எனவாகும்

(3) பிரதேசசபை எனவாகும் (4) இணக்கசபை எனவாகும்

(22) ஐக்கிய நாடுகள் சபையின் 1948 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனத்தில் பல்வேறு உரிமைகள் தொடர்பான கடமைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது

(1) சரத்து 1 – 2 ஆகும் (2) சரத்து 3 – 27 ஆகும்

(3) சரத்து 27 – 30 ஆகும் (4) முகப்புரை ஆகும்

(23) மரண தண்டனையை நீக்கும் நோக்கோடு உருவாக்கப்பட்ட குடியியல், அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனம் இரண்டாவது விருப்பிலான பின்னேட்டில் இன்று வரை கையொப்பமிடாத நாடு

(1) இத்தாலி (2) டென்மார்க் (3) பெல்ஜியம் (4) இலங்கை

(24) சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம்

(1) 1919 (2) 1922 (3) 1929 (4) 1939

(25) (A) - பிரான்ஸ்

(B) - ஜேர்மனி

(C) - ரஷ்யா

(D) - இந்தியா

(E) - ஜப்பான்

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை பெற்றுள்ள நாடுகளை மேலே குறிப்பிட்டவற்றில் இருந்து தெரிவு செய்க.

(1) A யும் D யும் (2) B யும் C யும்

(3) A யும் E யும் (4) A யும் C யும்



kalvi.lk

(26) இன்றைய கண்டுபிடிப்புக்களின் படி ஞாயிற்றுத் தொகுதியில் உயிர்வாழக்கூடிய ஒரேயொரு கோள்

(1) புவி (2) வெள்ளி
(3) செவ்வாய் (4) வியாழன்

(27) நிலையான அபிவிருத்தி என்ற எண்ணக்கருவின் முன்னோடியாக விளங்கியவர்

(1) ஜான் P. சேஸ் (2) கில்ஜி மாக்னிபோர்ன்
(3) கிறகார்லம் புரூட்லண்ட் (4) கார் வில்லொச்

(28) புராதன காலத்தில் இலங்கைக்கும் - இந்தியாவிற்கும் இடையில் அதிகளவில் நிலவிய தொடர்பு

(1) கலாசாரத் தொடர்பு (2) வர்த்தகத் தொடர்பு
(3) திருமணத் தொடர்பு (4) ஆக்கிரமிப்புத் தொடர்பு

(29) இலங்கைக்கான தொழிற்சந்தையை அதிகளவில் நிர்மாணித்துக் கொடுத்துள்ள நாடுகள்

(1) தென்கொரியா, சீனா
(2) இந்தியா, ஜப்பான்
(3) மத்திய கிழக்கு நாடுகள், தென்கொரியா
(4) மத்தியகிழக்கு நாடுகள், தென்னாசிய நாடுகள்

(30) முதன்முதலாக தோற்றம் பெற்ற பொருளாதாரக் கூட்டமைப்பு

(1) ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பு
(2) ஆபிரிக்க பொருளாதாரக் கூட்டமைப்பு
(3) லத்தீன் அமெரிக்க சுதந்திர வர்த்தக அமைப்பு
(4) ஐரோப்பா சங்கம்

(31) "சார்க்" அமைப்பில் இறுதியாக இணைந்து கொண்ட நாடு

(1) பூட்டான் (2) நேபாளம்
(3) ஆப்கானிஸ்தான் (4) மாலைதீவுகள்

(32) சார்க் அமைப்பின் செயலகம் அமைந்துள்ள நாடும் நகரமும்

(1) இந்தியா – புதுடில்லி (2) மாலைதீவுகள் - மலே
(3) பாகிஸ்தான் - இஸ்லாமபாத் (4) நேபாளம் - காத்மண்டு

(33) இயற்கைச் சுற்றாடலுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய பௌதிகக் காரணிகள் உள்ளடங்கிய விடையைத் தெரிவு செய்க

(1) எரிமலை கக்குகை, புவியதிர்ச்சி
(2) வரட்சி, உவர்த்தன்மையாதல்
(3) சூறாவளி, அமில மழைவீழ்ச்சி
(4) உவர்த்தன்மையாதல், அமிலமழை விழ்ச்சி

(34) பொதுநலவாயத்தில் அங்கத்துவம் பெறும் நாடுகளின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டம்

(1) சார்க் (2) கொழும்புத்திட்டம்
(3) ஆசியான் (4) ஐரோப்பிய ஒன்றியம்

(35) ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள கட்டமைப்புக்களில் இன்று செயற்பாடு குறைந்து காணப்படும் சபை

(1) பாதுகாப்புச்சபை (2) பொதுச்சபை
(3) செயலகம் (4) நம்பிக்கைப் பொறுப்புச்சபை



kalvi.lk

(36) ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக்கு நிரந்தரமற்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வது

(1) நம்பிக்கைப் பெறுப்புச்சபை (2) செயலகம்

(3) சர்வதேச நீதிமன்றம் (4) பொதுச்சபை

(37) ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை சார்பாக நீதிபதியாக இருந்தவர்

(1) வீரமந்திரி (2) க. ஸ்ரீபவன்

(3) A. ரனஜித் (4) சு. சர்வானந்தா

(38) பொதுநலவாய அமைப்பின் தோற்றத்திற்குக் காரணமான அறிக்கை

(1) தர்விகாகொமிசன் அறிக்கை

(2) சர்ஹம் கொமிசன் அறிக்கை

(3) பார்கம் கொமிசன் அறிக்கை

(4) டர்ஹம் கொமிசன்

(39) அபிவிருத்தி அடைந்த, அடைந்துவரும் நாடுகள் பொதுவாக எதிர்கொள்கின்ற பிரச்சினை

(1) அரசியல் ஸ்திரமின்மை

(2) வளங்களின் உரித்து வெளிநாட்டிடம் காணப்படுதல்

(3) சர்வதேச பயங்கரவாதம்

(4) சாதகமற்ற பாதீடு

(40) மேலே நிரல் I இல் சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுகின்ற நாணயங்களும் நிரல் II இல் அவற்றுக்குரிய நாடுகளும் தரப்பட்டுள்ளன.

| **நிரல் I** | **நிரல் II** |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | (A) ஐக்கிய அமெரிக்கா |
| யூரோ | (B) ஜப்பான் |
| யென் | (C) பிரித்தானியா |
| | (D) ஐரோப்பிய ஒன்றியம் |

நிரல் I இல் உள்ள நாணய அலகுகளைப் பயன்படுத்தும் நாடுகளை நிரல் II இல் இருந்து தெரிவு செய்யும் போது பெறப்படும் சரியான விடை

(1) CDB (2) ACB (3) CBD (4) CAB



kalvi.lk

## பகுதி - II

- ❖ **முதலாம் வினா கட்டாயமானது.**
- ❖ **முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களும் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**(1)** (i) நேரடி சனநாயக ஆட்சிமுறையினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதிலுள்ள பிரச்சினைகள் இரண்டு தருக.

(ii) சனநாயக மக்கள் சமூகத்தில் நீதித்துறை முக்கிய பங்காற்றும் இரண்டு துறைகளைத் தருக.

(iii) சுவிர்சர்லாந்தின் சமஷ்டிப் பேரவை (சட்டத்துறை) யின் இரண்டு மன்றங்களையும் குறிப்பிடுக.

(iv) உற்பத்திச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற உற்பத்திக் காரணிகள் இரண்டு தருக.

(v) சர்வதேச மோதலின் இரு வகைகளையும் தருக.

(vi) சட்டம் செயற்படும் முறையின் அடிப்படையில் அதன் இரு வகையையும் குறிப்பிடுக.

(vii) டொனமூர் அரசியல் யாப்பில் ஏற்படுத்தப்பட்ட முக்கிய அம்சங்கள் இரண்டு தருக.

(viii) ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் இடம் பெற்ற மனித உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வரலாற்று நிகழ்வுகள் இரண்டு தருக.

(ix) வளிமாசடைதலைத் துரிதப்படுத்துகின்ற மனித நடவடிக்கைகள் இரண்டு தருக.

(x) சர்வதேச உறவுகளின் இரு வகைகளையும் குறிப்பிடுக.

*(10 x 2 = 20 புள்ளிகள்)*

**(2)** (i) சனநாயக ஆட்சி முறையின் பண்புகள் இரண்டு தருக.

*(2 புள்ளி)*

(ii) சனநாயக ஆட்சி முறையின் முக்கியத்துவம் மூன்று தருக.

*(3 புள்ளி)*

(iii) (அ) அரசியல் கட்சி முறையின் அனுகூலங்கள் இரண்டு தருக.

*(2 புள்ளி)*

(ஆ) எதிர்க்கட்சியின் பொறுப்புக்களும் கடமைகளும் மூன்று குறிப்பிடுக.

*(3 புள்ளி)*



kalvi.lk

**(3)** (i) நல்லாட்சி என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

*(2 புள்ளி)*

(ii) நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகள் மூன்று தருக.

*(3 புள்ளி)*

(iii) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் நல்லாட்சியைச் செயற்படுத்துவதன் பெற்றுக்கொள்ளக் கூடிய நன்மைகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக.

*(5 புள்ளி)*

**(4)** (i) மோதல் வகைகள் இரண்டு தருக.

*(2 புள்ளி)*

(ii) மோதல் ஏற்படுவதற்கான மூன்று காரணங்களைத் தருக.

*(3 புள்ளி)*

(iii) (அ) மோதலைத் தீர்க்கும் நுட்ப முறையில் நடுநிலையாளரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் மூன்று தருக.

(ஆ) நடுநிலையாளர் தலையீடு செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

*(2 புள்ளி)*

**(5)** (i) இலங்கையில் செயற்படும் சட்டத்தொகுதிகள் இரண்டு தருக.

*(2 புள்ளி)*

(ii) இலங்கையின் நீதிமன்றத் தொகுதியில் உள்ளடங்கும் நீதிமன்றங்களைக் குறிப்பிடுக.

*(3 புள்ளி)*

(iii) சட்டமா அதிபரின் அதிகாரங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக.

*(5 புள்ளி)*

**(6)** (i) இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் பின்வரும் ஆண்டுகளில் அறிமுகப் படுத்தப்பட்ட யாப்புச் சீர்திருத்தங்களைத் தருக.

*1833*

*1931*

*(2 புள்ளி)*

(ii) *1972* முதலாம் குடியரசு யாப்பில் உள்ளடக்கப்பட்ட மூன்று விடயங்களைக் குறிப்பிடுக.

*(3 புள்ளி)*

(iii) *1978* இரண்டாம் குடியரசு யாப்பின்படி சனாதிபதியின் சட்டத்துறை அதிகாரங்கள் மூன்று குறிப்பிட்டு விளக்குக.

*(5 புள்ளி)*

**(7)** (i) சூழலிலிருந்து மனிதனுக்குக் கிடைக்கும் சேவைகள் இரண்டு தருக.

*(2 புள்ளி)*

(ii) இயற்கைக் காரணிகளினால் பௌதிக சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் மூன்று தருக.

*(3 புள்ளி)*

(iii) சூழல் தொடர்பான பிரசைகளின் பொறுப்புக்களும் கடமைகளும் மூன்று குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

*(5 புள்ளி)*



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page